# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,901 — 1932 ம் ௵ தை௴ 15 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினால் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தேசாதிபதியவர்கள் அனுத்மாவத்தை ரோட்டில் ஒரு பிரசித்த மலக்கூடம் கட்டுதலாகிய ஒரு பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால்:

பிரதமபடத்து இலக்கம் 20,289. கொட்டாஞ்சேனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அனுத்மாவத்தைரோட்டு 96 ம் நம்பர் பேரால் வரிகொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், வெறுந்தரை, கற்சுவர்களின் பகுதிகள் உளது | சி. எஸ். அந்தோனி, சமாதான நீதவான், முகத்துவாரம் | 0 | 0 | 5·71 |

மேற்சொல்லப்பட்ட காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஆண்டு மாசி மாசம் 15 ந் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு நகரசங்க கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மைகளும், அவ்வுடந்தைகளுக்காய் கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்று உறுதிகளாலும், பதிவு கொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணியின் உடந்தைகளின தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்க கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ௵ ஜனவரி௴ 15 ந் உ.

டபிள்யு. ரீ. ஸ்ரேஸ்,
நகரசங்க சபாநாயகரும், கொழும்பு நகராதிகாரியும்.

---

### சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு டிஸ்திறிக்குகளைச்சேர்ந்த கிரிமினெல் வழக்கு விசாரணை, 1932 ம் ஆண்டு மாசி மாதம் 9 ந் திகதியாகிய செவ்வாய்க்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,

யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோர்,
1932 ம் ௵ தை௴ 7 ந் உ.

எஸ். துரையப்பா,
வடமாகாண பிஸ்காலுக்காக.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

3——J. N. 16138–122 (1/32)
T 1